DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.216/2025

**P.W**.3 (LW3)

| | |
|---|---|
| Name | : திரு.பிரகாஷ் |
| Father/Husband Name | : திரு. முத்துபாண்டி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மேட்டுமங்களம் கிராமத்தில் குடியிருந்து காய்கறி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சி சுரேஷ் மற்றும் தர்ஷன் ஆகியோரை எனக்கு தெரியும். எனது கடைக்கு எதிரே தான் சாட்சிகள் இருவரும் வசித்து வருகிறார்கள்.

2) கடந்த 2025ம் வருடம் மே மாதம் ஒரு நாள் இரவு சுமார் 8 மணி அளவில் மழை பெய்வதுபோல் இருந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. அப்போது நான் கடையில் வியாபாரம் பார்த்துக் கொண்டிருந்தபோது திடீரென்று சத்தம் கேட்டது. நான் பார்த்தபோது என் கடைக்கு எதிரே தர்ஷன் என்ற பையனுக்கு விபத்து ஏற்பட்டிருந்தது. அதில் தர்ஷனுக்கு காது மற்றும் கைகளில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் எனது இரு சக்கர வாகனத்தில் தர்ஷன் என்பவரை என் கடைக்கு அருகே

இருக்கும் அரவிந்த் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவரை சேர்த்தேன். பின்னர் தர்ஷனின் பெற்றோருக்கு என் கடையில் வேலைபார்க்கும் நபர்கள் தகவல் சொன்னார்கள். தகவல் சொன்ன உடனே அவர்கள் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

என் கடையில் வேலை செய்யும் ஊழியர்கள் சொல்லி தான் தர்ஷனின் பெற்றோர்கள் அரவிந்த் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.